

# மதுரை காமராசர் பல்கலைக்கழகம் மதுரை – 625 021
# தொலை நிலைக் கல்வி இயக்ககம்

## MADURAI KAMARAJ UNIVERSITY MADURAI – 625 021
## DIRECTORATE OF DISTANCE EDUCATION

## பருவ / அல் - பருவ / அரியர் தேர்வுகள் ஏப்ரல் - 2020
**SEMESTER / NON SEMESTER / ARREAR EXAMINATION APRIL - 2020**
**UG – 18AT,20CT., PG – 19AT, 20 CT and Arrear Students**

## இணையவழி தேர்விற்கான வழிகாட்டு நெறிமுறைகள்
## GUIDELINES FOR ONLINE EXAMINATIONS

1. பருவ / அல்-பருவ / அரியர் தேர்வுகள் - ஏப்ரல்-2020 ஏற்கனவே **www.mkudde.org** என்ற இணையதளத்தில் வெளியிடப்பட்ட தேர்வு அட்டவணைப்படி இணையம் வாயிலாக நடத்தப்படும். மாணவர்கள் கோவிட் - 19 பரவல் சூழலைக் கருத்தில் கொண்டு வசிக்கும் இடத்திலேயே தேர்வு எழுதலாம்.
   Semester / Non semester / Arrear Examinations - April-2020 are conducted through online as per the examination time-table already given in the website **www.mkudde.org**. The students can write the examination at their residence keeping safety in view of COVID – 19 pandemic situations.

2. படிப்பு முடித்த மாணவர்கள் தங்களுடைய இறுதி ஆண்டிற்குரிய (Final Year) நிலுவைத் தாள்களுக்கு தேர்வுக் கட்டணம் செலுத்தியிருந்தால் மட்டுமே இத்தேர்விற்கு அனுமதிக்கப்படுவார்கள்.
   The students who have completed the programme and having arrear papers / courses in the final year will be permitted for this examination, if they have paid examination fee already.

3. இணையதள இணைப்புடன் கூடிய ஆண்ட்ராய்டு கைபேசி அல்லது ஐ-போன் தேர்வுக்கான குறைந்தபட்சத் தேவை ஆகும்.
   The minimum requirement for examination is Android Cell Phone or iPhone with net connectivity.

4. குறிப்பிட்ட தேர்வுகளுக்கான வினாத்தாள்களை, காலை தேர்வு எழுதும் மாணவர்கள் தேர்வு நாளன்று காலை 9.00 மணி முதல் 10.00 மணி வரையிலும், பிற்பகல் தேர்வு எழுதும் மாணவர்கள் பிற்பகல் 1.00 மணி முதல் 2.00 மணி வரையிலும் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.
   The Question Paper (QP) for the respective courses of writing examination will be made available to the students for downloading on the date of examination from 9.00 AM to 10.00 AM for morning session examiners and 1.00 PM to 2.00 PM for afternoon session examiners.

5. மாணவர்கள் வினாத்தாளைப் பதிவிறக்கம் செய்தோ அல்லது நேரடியாக வினாத்தாளை இணையத்தில் பார்த்தோ, காலை தேர்வு எழுதும் மாணவர்கள், காலை 10.00 மணி முதல் நண்பகல் 1.00 மணி வரையிலும், அதே போல் பிற்பகல் 2.00 மணி முதல் மாலை 5.00 மணி வரையிலும் தேர்வு எழுதலாம். தேர்வு எழுதி முடித்தப் பின் விடைத்தாள்களை ஸ்கேன் செய்து மதுரை காமராசர் பல்கலைக்கழக தேர்வு இணையதளத்தில், (**mkuddeexam.org)** காலை தேர்வு எழுதும் மாணவர்கள் பிற்பகல் 2.00 மணிக்குள்ளும், பிற்பகல் தேர்வு எழுதும் மாணவர்கள் மாலை 6.00 மணிக்குள்ளும் பதிவேற்றம் செய்ய வேண்டும்.
   The students can either download or view the question paper for examination and they write their examination from 10.00 AM to 1.00 PM (Morning session) and 2.00 PM to 5.00 PM (Afternoon Session). After completion of the examinations, the students should upload their scanned copy of answer sheets in the MKU online portal, **(mkuddeexam.org)** on or before 2.00 PM (Morning session) and 6.00 PM (Afternoon Session).

6. விடைத்தாளின் முன் பக்க மாதிரி (இணைப்பு -1) ல் இணைக்கப்பட்டுள்ளது. அதை தேவையான அளவு நகல்கள் எடுத்து வைத்து பயன்படுத்திக் கொள்ளவும்.
   Front page content is attached in the Annexure-1). Students can take print out and use it.

7. மாணவர் தேர்வு வினாக்கான விடைகளை A4 அளவு கோடிடப்படாத வெள்ளைத்தாளில், 45 பக்கங்களுக்கு மிகாமல், தாளின் ஒரு பக்கத்தில் (one side) மட்டுமே எழுத வேண்டும்.
   The student should write the answers of the examination in the A4 size white un-ruled plain paper in one side only.

8. மாணவர் விடைத்தாளின் ஒவ்வொரு பக்கத்திலும் கீழ் பகுதியில் பதிவு எண் எழுதி கையொப்பமிட வேண்டும்.
   The student should write Registration Number and make a sign in the bottom of each page of the answer sheet.

9. மாணவர்கள் தேர்வு எழுதிய பின் விடைத்தாள்களை **"கூடுதல் தேர்வு ஆணையர், தொலைநிலைக் கல்வி இயக்ககம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், பல்கலை நகர், மதுரை 625 021",** என்ற முகவரிக்கு தபால் அல்லது கூரியர் மூலமாக அனுப்ப வேண்டும் விடைத்தாள்கள் அனுப்பும் A4 அளவு துணி-ஒட்டப்பட்ட உறையின் மேற்புறத்தில் **EXAM CONFIDENTIAL** என்று எழுதவும். காலதாமதமாக அனுப்பப்படும் விடைத்தாள்கள் மதிப்பீடு செய்வதற்கு ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. பதிவேற்றம் செய்யப்பட்ட விடைத்தாள் மற்றும் தபால் மூலம் பெறப்பட்ட விடைத்தாள் இவை இரண்டும் ஒப்பிடப்பட்டு, மதிப்பீடு செய்யப்படும். இவற்றில் மாற்றங்கள் இருப்பின் தேர்வுத்தாள் மதிப்பீடு செய்யப்படமாட்டாது.
   On the same day of examination, the answer script of the paper / course should also be sent to **"The Additional Controller of Examinations, Directorate of Distance Education, Madurai Kamaraj University, Madurai-625 021"** through Speed post / Registered post / Courier. The students have to keep the answer script in the A4 size cloth-lined envelope and write on the upper side of envelope as

**EXAM CONFIDENTIAL**. The Answer scripts received belatedly will not be considered for evaluation. Both uploaded soft copy and posted answer scripts will be compared and if any change is there, the answer script will not be evaluated.

10. பார்வைக் குறைபாடுள்ள மாணவர்கள் பல்கலைக்கழக முன் அனுமதி பெற்று தேர்வு எழுத உதவியாளர்களை ஏற்பாடு செய்துக் கொள்ளலாம்.
The person with blindness may have scribe for writing the examination with the prior permission of the university.

11. இந்தத் தேர்வு முறையில் மாணவர்கள் எந்தவிதமான முறைகேடுகளுக்கும் இடம் தராமல் தேர்வுகளை எழுதி அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். முறைகேடுகள் ஏதும் கண்டுபிடிக்கப்பட்டால் மதுரை காமராசர் பல்கலைக்கழக விதிமுறைகளின்படி நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
Students are advised to not do any Malpractices while writing the examinations. If the malpractices find in any form, as per the MKU norms the action will be taken.

12. மாணவர்கள் தேர்வுகள் தொடர்பாக அவ்வப்போது வெளியிடப்படும் தகவல்களைப் பெற, mkudde.org என்ற இணையதளத்தைப் பார்க்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.
The students are informed to keep watching the website mkudde.org in regularly for continuous updating of examinations information.

Additional Controller of Examinations i/c